அறிவிப்புகள்—தொடர்ச்சி.

நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஐ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (17—11—1987) காலை 10—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

*101.* உலக வங்கியின் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் நீரகற்று வாரியத்தினருக்கு, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தாரால் விற்கப்படும் 'அரசு' கல்நார் சிமெண்டினாலான அழுத்தக் குழாய்கள் மற்றும் துணைக் கருவிகள் மீது சலுகை முறையில் வரி விதிப்பது

குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 24—7—1987ஆம் நாளிட்ட 851 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

102. வருவாய்த் துறையின் 18—3—1970ஆம் நாளிட்ட 86/1970ஆம் எண். அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30—7—1987ஆம் நாளிட்ட 872 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

அ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

18. 1976–77 மற்றும் 1977–78 ஆகிய ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1985–86) பத்தொன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்திநான்காவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS